
# திராவிடத்தால் வாழ்கிறோம்

920

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

# மாநாடு

ர.பிரகாசு

75

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## தி.மு.க.-வும் தி.க.-வும் இணைந்து போராடும்!

1977-இல் ஜனதா அரசு அமைந்தது முதலே, இந்தி திணிப்பு முயற்சிகள் பெருகின. 1978 மார்ச் 11,12 ஆகிய தேதிகளில் கோவையில் நடைபெற்ற அந்தக் கட்சியின் மாநில மாநாட்டில் பேசிய பிரதமர் மொரார்ஜி தேசாய், ‘இந்தி திணிக்கப்படுவதாக செய்யப்படும் பரப்புரையில் உண்மை இல்லை’ என்றார். ‘ஆனால், பல மொழிகள் பேசப்படும் இந்தியாவிற்கு ஒரு இணைப்புமொழி அவசியம், அது 50-60 சதவிகிதம் மக்கள் பேசும் இந்தியாகத்தான் இருக்க முடியும்’ என்றார். அதன் தொடர்ச்சியாக மே மாதத்தில், தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்களில் துணைச் செயலாளர் பொறுப்புக்கு மேலே இருப்பவர்கள், இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜனதா அரசு சுற்றறிக்கை அனுப்பியது.

ஜனதா அரசின் இந்தப்போக்கைக் கண்டித்து, தி.க. சார்பிலும், தி.மு.க. சார்பிலும் அதே ஆண்டில் 2 முக்கிய மாநாடுகள் நடைபெற்றன. ஜூன் 15-ஆம் நாள் சென்னை பெரியார் திடலில், திராவிடர் கழகம் சார்பில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அங்கு பேசிய கலைஞர், “இந்தி திணிப்பை எதிர்த்து தி.மு.க.-வும் தி.க.வும் தொடர்ந்து போராடும்” என்றார்.

தி.மு.க.சார்பில், டிசம்பர் 23, 24 ஆகிய தேதிகளில் திருச்சியில் இந்தி திணிப்பு எதிர்ப்பு மாநாடு கூட்டப்பட்டது. காலையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி நடைபெற்றது. புலவர் கோவிந்தன் தலைமையில், நடைபெற்ற இம்மாநாட்டை, வைகோ தொடங்கிவைத்தார். பெரியார் படத்தை கி.ஆ.பெ.விசுவநாதமும், அண்ணா படத்தை ஆசிரியர் கி.வீரமணியும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தை முடியரசனும், அஞ்சா நெஞ்சன் பட்டுக் கோட்டை அழகிரி படத்தை மன்னை நாராயணசாமியும், இராமாமிர்தம் அம்மையார் படத்தை அலமேலு அப்பாத்துரையும், மொழிப்போர் தியாகிகள் படத்தை இளம்பரிதியும் திறந்துவைத்தனர்.

தமிழையும், அனைத்து மாநில ஆட்சி மொழிகளையும் ஒன்றிய அரசின் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்ற தீர்மானத்தை தி.மு.கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் முன்மொழிந்தார். அத்தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய கலைஞர், 1979-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாளை இந்தி எதிர்ப்பு நாளாக தி.மு.கழகம் கடைபிடிக்கும் என்று அறிவித்தார்.

“அன்றைய தினம் தி.மு.க. தொண்டர்கள் தங்கள் இல்லங்களில் கருப்புக்கொடி ஏற்றுவார்கள், கருப்புச் சட்டை அணிந்து இந்தி திணிப்பை எதிர்த்து ஊர்வலம் செல்வார்கள்” என்று தெரிவித்தார் கலைஞர்.

தி.மு.கழகத்தின் இந்தப் போராட்டத்தில் திராவிடர் கழகமும் பங்கேற்கும் என்று ஆசிரியர் கி.வீரமணியும் அறிவித்தார். இதற்கிடையே ஜனவரி 19-ஆம் தேதி மீண்டும் சென்னைக்கு வந்த மொரார்ஜி தேசாய், ‘இந்தி திணிப்பு எதிர்ப்பு என்பது செத்த குதிரை’ என்று தமிழர்களை உசுப்பி விட்டார். ஜனவரி 26-ஆம் தேதி இந்தி எதிர்ப்புக் குதிரை பாய்ந்து செல்லும் என்று பதிலளித்தார் கலைஞர்.

திட்டமிட்டபடி, ஜனவரி 26-ஆம் தேதி பெரியார் திடலில் இருந்து அண்ணா அறிவாலயம் நோக்கி பேரணி நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் கருப்புச் சட்டை அணிந்து, கருப்புக்கொடி ஏந்தி பேரணியில் பங்கேற்றனர். கோவை, திருச்சி, மதுரை என பல்வேறு நகரங்களில், தி.மு.கழகத்தின் முன்னணி வீரர்கள் தலைமையில் பேரணி நடைபெற்றது. அறிவாலயத்தில் கலைஞர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ் மொழியை ஒன்றிய ஆட்சி மொழியாக்கும் வரையில், இந்தி திணிப்புக்கு எதிராக போராட்டம் தொடரும் என்று அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

...கூட்டம் திரளும்

---

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


75

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## சாதி கட்டமைப்பின் உலகத் தன்மை!

சர்வதேச அளவில், சாதி பற்றிய உரையாடல்களும் புரிதல்களும், சாதிக்கு எதிரான குரல்களும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. 2020-ஆம் ஆண்டு, அமெரிக்க பெண் எழுத்தாளரான இஸபெல் வில்கெர்சன் கேஸ்ட் - தி ஆரிஜின் ஆஃப் அவர் டிஸ்கன்டென்ட்ஸ் (Isabel Wilkerson ‘Caste The Origin of our Discontents’) என்றொரு நூலை எழுதி இருந்தார். சாதியை நிறவெறியுடன் ஒப்பிட்டு, இரண்டும் இணையும் புள்ளியை விரிவாக விளக்கிய அந்த நூலை, மயிலை பாலு தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்ய எதிர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

நூல் ஆசிரியரின் பார்வையில், சாதி ஓர் உலகப் பிரச்சினை, அது இந்தியாவைத் தாண்டி, பிற நாடுகளிலும் குறிப்பாக அமெரிக்காவில் கொடூரமான முறையில் கடைபிடிக்கப்படுகிறது என்பதையும், ஓர் அமெரிக்கரின் வாழ்க்கையில் சாதியப் பாகுபாடு என்பது எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் பல்வேறு நிகழ்வுகள் மூலமும், இந்தியாவின் சாதியத் தன்மையுடன் ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.




குறிப்பாக, இந்தியாவில் தலித்துகளும், ஜெர்மனியில் யூதர்களும், அமெரிக்காவில் கருப்பினத்தவரும் சந்தித்த, சந்தித்துக்கொண்டிருக்கும் இன்னல்களை ‘சாதி’ (CASTE) என்ற பதத்தின் கீழ் கொண்டு வருவதால் ‘இந்திய சாதி’ அமைப்பு உலகப் பார்வைக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

இந்நூல் மொத்தம் 6 பகுதிகளால் ஆனது. அதில் முதல் பகுதி வரலாற்றில் சாதியின் பெயரால் நடந்த கொடுமைகளைப் பற்றியும், சமகாலத்தில் அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது என்பது குறித்தும் விளக்குகிறது. இரண்டாவது பகுதி சாதி என்ற கருத்தாக்கம் எப்படிக் கட்டமைக்கப்பட்டது, அது மானுட சமூகத்தின் ஆழ்மனதில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி பேசுகிறது. சாதிய கட்டமைப்பின் 8 தூண்கள் (8 pillars of caste) என்ற மூன்றாவது பகுதியில் சாதியைத் தூக்கி நிறுத்தும் முக்கிய 8 கூறுகளைப் பற்றி எழுதியுள்ளார்.

நான்காவது பகுதியில் சாதி மக்களிடம் எப்படி கடைபிடிக்கப்படுகிறது, குறிப்பாக, அமெரிக்காவின் அரசு எந்திரம், காவல்துறை, இன்னபிற துறைகளிலும் சாதி ஏற்படுத்திய தாக்கத்தினால் கடைபிடிக்கப்படும் ஏற்றத்தாழ்வுகள் பற்றிப் பேசுகிறது.

‘சாதியத்தின் விளைவு’ என்ற பகுதியில், சாதியின் இரட்டைத்தன்மையினை, அதாவது ஆதிக்கச் சாதிக்கும்-தாழ்த்தப்பட்ட சாதிக்கும் இடையிலான சமூக வேறுபாடுகளை, பல்வேறு உண்மைச் சம்பவங்கள் மூலமும் தனக்கு நடந்த அனுபவங்கள் மூலமும் விளக்குகிறார்.

ஆறாவது பகுதி முழுக்க முழுக்க 2016 அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பற்றியும், அப்போது அதைச்சுற்றி நடந்த மாற்றங்கள் பற்றியும், வெற்றிபெற உதவிய உயர்சாதி மனோபாவம் பற்றியும் விளக்குகிறார். அதில் கடைசிக் கட்டுரையில் வாக்கு சதவிகிதங்கள் மக்களுக்கு ஏற்றவாறு பகுக்கப்பட்டு, எந்த கட்சிக்கு எதன் அடிப்படையில் செலுத்தப்பட்டன என்றும் விளக்கியிருப்பார். பெரும்பான்மை வெள்ளை அமெரிக்கர்கள் டொனால்டு டிரம்பின் குடியரசு கட்சிக்கும் (REPUBLIC PARTY), பிற சிறுபான்மை இன மற்றும் கருப்பின மக்கள் ஹிலாரி கிளின்டனின் ஜனநாயகக் கட்சிக்கும் (Democratic party) தான் வாக்களித்தனர் என்றும், இந்தத் தேர்தல் முடிவு என்பதே சாதிய மனோ பாவத்தின் வெளிப்பாடு என்றும் முடிப்பார்.

கடைசிப் பகுதியில் சாதியை வெறுத்து பூணூலைக் கழற்றி எரியும் பார்ப்பனரும், ஹோலோ காஸ்ட்டுக்கு (HOLOCAUST) க்கு மன்னிப்புக்கேட்கும் நாஜி (NAZI) ஜெர்மானியரும், நிறவெறிக்கு எதிரான போரட்டத்தில் துணை நிற்கும் வெள்ளை அமெரிக்கரும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று நிறைவுறுகிறது இந்நூல். சாதி பற்றிய உரையாடல்கள் தெளிவுபெற வாசிப்பை கோரும் நூல்.

...வாசிப்போம்.

---

## கவனம் பெறும் யூ டியூப் சேனல்!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது பா.ஜ.க.-வின் பொய் நாடகங்களை, போலிச் செய்திகளை தோலுரித்துக் காட்டியவர் யூடியூபர் துருவ் ரத்தி. அவரது வீடியோக்கள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் பல லட்சம் பேரால் பார்க்கப்பட்டன. கிராமப்புறங்களில் பொது இடங்களில் திரை அமைத்துப் பார்க்கும் அளவுக்கு, வட மாநிலங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது அவரது வீடியோக்கள்.

அதே போன்றதொரு முயற்சியில் கவனம் ஈர்க்கிறது, பிரவுண் என்லைட்மென்ட் (Brown Enlightenment) என்கிற யூ டியூப் சேனல். தற்போது வளர்ந்து வரும் இந்த யூ டியூப் சேனல் ஆங்கிலத்தில் வெளியாகிறது. இவர்களின் வீடியோக்களும் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் தமிழ்நாட்டின் சித்திரத்தைக் கொண்டு சேர்க்கின்றன. பாரதிய ஜனதா கட்சி மீது விமர்சனத்தை வைக்கிறது. தமிழ்நாட்டின் மதுரையை இலக்காக வைத்து, பாரதிய ஜனதா கட்சி, வகுப்புவாத பிரிவினைக்குத் திட்டமிடுவதை ஆதாரங்களுடன் விமர்சனம் செய்கிறது.


இந்தியாவின் பன்மைத்தன்மையைக் காப்பதற்கு தமிழ்நாடு முன்நின்று வருவதையும் விரிவாக அலசுகிறது. ‘பெரியார் யார்? தமிழ்நாடு ஏன்?’, இதர மாநிலங்களில் இருந்து வேறுபட்டு நிற்கிறது என விளக்குகிறார்கள். ஒட்டுமொத்தமாக, இந்த வீடியோக்கள் தமிழ்நாட்டைப் பார்த்து மற்ற மாநிலங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவற்றை முன்வைக்கின்றன.

ஆங்கிலத்தில் இந்த முயற்சி வரவேற்கத்தக்கதாக உள்ளது. இந்தியில் தமிழ்நாடு குறித்த சித்திரத்தைக் கொண்டு செல்ல வேண்டியது காலத்தின் தேவை என்பதை உணர வைக்கிறது இந்த யூ டியூப் சேனல்.

வீடியோவைப் பார்க்க ஸ்கேன் செய்யவும்.

---

# ஃப்ளாஷ்பேக்



துபாய் கே.அன்வர் அலி



## தலைவருக்கு துபாயில் மிகச் சிறப்பான வரவேற்பு!

2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸின் ‘துபாய் எக்ஸ்போ’-வுக்கு வருகை தந்தார் தமிழ்நாடு முதல் அமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்கள். உடன் துர்கா அம்மா அவர்களும் வருகை தந்தனர். ஐக்கிய அரபு அமீரக கழகத்தின் சார்பில், தலைவருக்கு மிகச் சிறப்பான வரவேற்பு அளித்தோம். வெளிநாடு வாழ் தமிழர்களுக்குக் கழகத் தலைவரைச் சந்திக்க அரிதாக அமையும் சந்தர்ப்பங்களில், அந்த ஆண்டு தலைவருடன் அம்மாவும் வருகை தந்தது, மிகப்பெரிய கொண்டாட்டமாக அமைந்தது..

**– துபாய் கே.அன்வர் அலி, மாநிலத் துணைச் செயலாளர், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

# கருவூலம்

## அண்ணல் அம்பேத்கருக்கு சிலை!

1963-ஆம் ஆண்டு நவம்பர் 28 அன்று, சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை அருகில், அண்ணல் அம்பேத்கரின் சிலை நிறுவப்பட்டது. அப்போது மாநகராட்சி நிர்வாகம், தி.மு.க. கழகத்தின் கையில் இருந்தது. கழகத்தின் சார்பில் மிகப் பிரம்மாண்டமான விழா நடத்தி அந்த சிலை திறக்கப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.